(அ) 2008, திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,68,279 ஆன 09 ஊழியர் கடன் மீதிகள் மீளாய்வாண்டில் அறவிடப்படாமல் இருந்த போதும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய காரணங்கள் தெரிவிக்காமல் ஊழியர் கடன் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

(ஆ) முற்பணக் கொடுப்பனவு

(i) ரூபா 2,050,469 தொகையான உள்நாட்டு வழங்கல் முற்கொடுப்பனவு மீதியில் 2001 தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 342,945 ஆன 18 மீதிகள் 2009, திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை;

(ii) ஆராய்ச்சி மற்றும் ஏனைய நிதியங்களின் கீழ் 1991 முதல் 2007 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 451,632 கூட்டு மொத்தப் பெறுமதியான முற்பணங்கள் 2009, திசெம்பர் 31 வரையும் தீர்க்கப்படாது இருந்தது.

(iii) பல்கலைக்கழகத்திற்கு 40 வெளித்தரப்பினரால் 02 முதல் 09 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 796,677 தொகையான மின்சார செலவினம் மற்றும் ரூபா 113,077 தொகையான நீர்க் கட்டணம் என்பன 2009, திசெம்பர் 31 வரையும் அறவிடப்படாது இருந்தது.

(iv) தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்கு ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 210,000 முற்பணத் தொகை ஆண்டின் போது தீர்க்கப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் தீர்க்கப்படாத முற்பணமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழக கல்விசார் பதவியணியினைச் சார்ந்த 195 பேரிடமிருந்து உடன்படிக்கைகளை மீறியமைக்காக ரூபா 135,111,976 தொகை அறவிடப்பட வேண்டிய போதிலும், அப்பணத்தினை அறவிடுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 06 வெளி நிறுவனங்களுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்த காணி மற்றும் கட்டிடங்களுக்காக ரூபா 10,336,177 ஆன குத்தகைப் பணத்தை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| நிறுவனம் | வருமானம் அறவிடப்பட வேண்டிய காலம் | கிடைக்க வேண்டிய தொகை ரூபா |
|---|---|---|
| இலங்கை வங்கி, பேராதனை | 1992 முதல் 2009 வரை | 1,650,000 |
| இலங்கைப் போக்குவரத்துச் சபை | 1987 முதல் 2009 வரை | 2,058,000 |
| கங்கவட்ட கோரளை பிரதேச சபை | 2001 முதல் 2009 வரை | 4,145,000 |
| மலைநாட்டு உழவர் புனரமைப்பு ஆணைக்குழு | 1992 முதல் 2009 வரை | 2,459,000 |
| மீன்பிடிக் கூட்டுத்தாபனம் | 2007 முதல் 2009 வரை | 24,177 |
| | | 10,336,177 |

(உ) அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களுக்காகச் செலுத்தப்பட்ட சம்பள முற்பணங்கள் அந்தந்த மாதங்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 731,320 தொகையான சம்பள முற்பணம் 02 ஆண்டு முதல் 07 ஆண்டுகள் காலமாக மாற்றமின்றிக் காணப்பட்டது.

(ஊ) 2004 ஆம் ஆண்டுக்கு முன்னரிலிருந்து பல்கலைக்கழகத்தால் செலுத்தப்படாத சம்பளம் ரூபா 56,113 தொடர்பாக நி. பி. 271(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 157 அமைய ஊழியர்களுக்காக 2003 முதல் 2006 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய விழா முற்பணம் ரூபா 351,136 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை :

தேவையான தகவல்கள் காணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா 5,832,675,662 கூட்டுத்தொகையான கீழே காட்டப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களைத் திருப்திகரமாக கணக்காய்வில் சான்றுறுதி செய்ய/மெய்மையாய்வு செய்ய

முடியாதிருந்தது:-

| விடயங்கள் | பெறுமதி ரூபா | விபரம் |
|---|---|---|
| நிலம் | 1,220,000,000 | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பட்டோலைகள் |
| கட்டிடங்கள் | 2,572,702,659 | மேற்படி |
| உபகரணம் மற்றும் கருவிகள் | 86,468,398 | மேற்படி |
| மோட்டார் வாகனங்கள் | 68,811,868 | மேற்படி |
| தளபாடம் மற்றும் உபகரணங்கள் | 124,167,702 | மேற்படி |
| காரியாலய மற்றும் வேறு உபகரணங்கள் | 329,981,792 | மேற்படி |
| ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 866,355,683 | மேற்படி |
| நூலகப் புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் | 556,738,246 | மேற்படி |
| தீர்க்கப்படாத சம்பள முற்பணம் | 190,011 | பட்டோலைகள் |
| தீர்க்கப்படாத விழா முற்பணம் | 88,314 | பட்டோலைகள் |
| கொடுபடாத சம்பளம் | 56,113 | பட்டோலைகள் |
| கடன்கொடுத்தோர் மீதி - 04 | 817,863 | பட்டோலைகள் |
| கொடுப்பனவுகள் | 6,297,013 | 10 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் |
| | 5,832,675,662 | |

2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை:-

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன:-

| சட்டங்கள், விதிகள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் | |
| 11 பிரிவு | நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் ரூபா 371,272,388 முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) அரசாங்க நிதிப் பிரமாணக் கோவை (நி. பி.) | |
| (i) நி. பி. 104, 110 மற்றும்156(1) | 1. 1993 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 40 வாகனங்கள் 56 சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளாகி ரூபா 26,61,645 திருத்தச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக நி. பி. பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | ii. மருத்துவ பீடத்திற்குரிய தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்காக 2005 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,33,572 பெறுமதியான லெப்டொப் வகையிலான கணனியொன்று 2006 பெப்புருவரி மாதத்தின் போது காணாமல் போயிருந்தமை தொடர்பாக நி. பி. பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி. பி. 394 | 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான ரூபா 2,09,982 பெறுதியான மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iii) நி. பி. 454(1) | பொருள் பெறுவனவுகள் மற்றும் விநியோகங்கள் என்பவற்றை பதிவு செய்வதற்காக பொருட் பதிவேடொன்று பராமரிக்கப்பட வேண்டிய போதிலும், மருத்துவ பீடத்திற்குரிய மருத்துவ திணைக்களத்தினால் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 9,10,530 பெறுமதியான இரசாயனப் பொருட்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவை | |
| (ii) III ஆம் அத்தியாயத்தின் 26.3 மற்றும் 26.7.3 ஆம் பிரிவுகள் | பகுதிநேர விரிவுரையாளர்களைச் சேர்க்கும் போது மதிப்பீட்டு திட்டமொன்றின் அடிப்படையில் தெரிவுக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் சேர்க்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் பல்கலைக்கழகத்தின் 08 பீடங்களுக்கும் வெவ்வேறு பாடநெறிகளுக்காக பகுதி நேர விரிவுரையாளர்களுக்காக ரூபா 83,09,264 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) XXVII ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவு | இரண்டு பீடங்களுக்கு சொந்தமான ரூபா 2,18,950 பெறுமதியான இரு சக்கரஉழவு இயந்திரங்கள் இரண்டையும் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத 01 கைஉழவு இயந்திரம் ஒன்றும் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 8.1.2 ஆம் உப பிரிவு மற்றும் 8.2 ஆம் பிரிவு | கடமை நடவடிக்கைகளுக்காக தனிப்பட்ட வாகனத்தை ஈடுபடுத்தியமைக்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் 1 கிலோ மீற்றருக்கு ரூபா 16 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்ட காரணத்தால் இரண்டு விரிவுரையாளர்களுக்கு ரூபா 19,061 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) 2008, நவெம்பர் 28 ஆந் திகதிய பிரதி உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் ரபக/நிகொ/பொது/2008 ஆம் இலக்க வருமான வரி அறவீடு தொடர்பான கடிதத்தின் 04 ஆம் பந்தி | ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 5% வீதம் நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் 17 ஒப்பந்தங்களுக்காக ரூபா 756,543 தொகையான வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) 1990, ஒற்றோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றிக்கையின் 02 ஆம் பந்தி | நிறுவனத்திடமுள்ள வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பாக பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

2.2.6 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்:

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன :

(அ) 1978, மார்ச் 10 ஆந் திகதிய பீஈ/1/174/11(ஆ) ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளரின் சுற்று நிருப கடிதத்திற்கு முரணாக 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 திசெம்பர் 31 வரை மொழித் தேர்ச்சிக்கான கொடுப்பனவாக ரூபா 31,494,765 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூலை 18 ஆந் திகதிய பிடி/ஐ. என்எஸ்/டீஎல்/ஜீஎஸ்/ஏ 078 இலக்கமுடைய வரவு செலவுத் திட்ட பணிப்பாளரின் சுற்றறிக்கைக்கு முரணாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியளர் நம்பிக்கை நிதியத்திற்கும் கல்விசார் படிகள் உள்ளடங்கலாக பங்களிப்புத் தொகையானது கணக்கிடப்பட்டதால் 1997 முதல் 2009 ஆம் ஆண்டு வரை முறையே ரூபா 111,234,858 மற்றும் ரூபா 22,246,970 பங்களிப்புத் தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்ருந்தது.

(இ) மீளாய்வாண்டில் ஒன்றிணைந்த சுகாதாரக் கல்விப் பீடத்தில் நடாத்தப்பட்ட கண்காட்சியிலிருந்து இடம்பெற்ற ரூபா 176,888 தொகையான நிதிசார் நட்டத்தை கட்டுப்பாட்டுச் சபை அங்கீகாரமின்றி பீடாதிபதி நிதியத்தில் தீர்க்கப்பட்டிருந்தது.

(ஈ)) 2007, மே 11 ஆந் திகதிய 9/2007 ஆம் இலக்க பொது நிர்வாக அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் அத்தியாவசிய சேவைகளுக்காக மட்டும் இளைப்பாறிய உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்ள முடியுமான போதிலும், அதற்கு முரணாக ஓய்வு பெற்ற பேராசிரியர் ஒருவர் அப்பீடத்திற்குரிய திணைக்களமொன்றின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத பணிப்பாளர் பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன், அவருக்கு 2008 முதல் 2009, ஓகத்து வரையான காலப்பகுதிக்காக ரூபா 150,000 கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்தது.

(உ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் III ஆம் அத்தியாயத்தின் 5 ஆவது உப பிரிவின் பிரகாரம் சகல நியமனங்களும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு இணங்க இருக்க வேண்டிய போதிலும், தொலைக்கல்வி மற்றும் தொடர் கல்வித் துறைக்காக அங்கீகரிக்கப்படாத கணனி உள்ளீட்டு உதவியாளர் பதவிக்காக 08 உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு 2008/2009 ஆம் ஆண்டுகளிற்கு ரூபா 673,851 கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) கலைப்பீடத்திற்குரிய 04 நிரந்தர விரிவுரையாளர்களும் 06 தற்காலிக விரிவுரையாளர்களும் மேலதிகமாக இருக்கும் போது முறையான அங்கீகாரமின்றி தற்காலிக விரிவுரையாளர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார்.

(எ) 2003, சனவரி 29 ஆந் திகதிய பீஈ/1/174/1/2003 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் கடிதம் மற்றும் பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் III ஆம் அத்தியாயத்தின் 5 ஆவது பிரிவின் பிரகாரம் சகல ஆட்சேர்ப்புக்களும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு இணங்க இருக்க வேண்டியதுடன் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டியதுடன், போதிலும், அவ்வாறான அங்கீகாரமின்றி 05 பணிப்பாளர் பதவிகளை உருவாக்கி அதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,105,000 படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) மருத்துவ பீடத்தின் மருத்துவ திணைக்களத்திற்குரிய 06 இரசாயன தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் பேராதனை போதனா வைத்தியசாலையில் சேவை புரிவதுடன் அவர்களுடைய நிறுவனத்திற்கு எவ்வித சேவைகளும் வழங்காதிருந்தும் ரூபா 52,83,236 ஆன சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்ததுடன், அதில் இரண்டு பேருக்கு 2005 முதல் 2009 வரையான காலப்பகுதியில் அவ்வைத்தியசாலையிலிருந்து ரூபா 374,096 தொகையான படிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(ஐ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 45(2) (XV) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்திற்காக உடன்படிக்கையில் கைச்சாத்திடுதல் உபவேந்தரால் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், தகவல் தொழிநுட்ப நிலையக் கட்டிடத்தின் பகுதியொன்றை வாடகைக்கு வழங்குவதற்காக ரூபா 462,114 இற்கு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை தாபனப் பணிப்பாளரால் கையொப்பமிடப்பட்டிருந்தது.

(ஒ) வெளித்தரப்பினருடன் பல்கலைக்கழகத்திற்காக உடன்படிக்கைகளில் ஈடுபடுவது உபவேந்தரால் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், கலைப்பீடத்தின் பீடாதிபதியால் வெளித்தரப்பினருடன், 2009 மாச்சு 09 ஆந் திகதி ரூபா 1,070,000 பெறுமதியான உடன்படிக்கையை மேற்கொண்டிருந்ததுடன் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் அங்கீகாரத்தின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 192,500 பெறுமதியான உபகரணங்களை பல்கலைக்கழகத்திற்கு திருப்பி ஒப்படைத்திருக்கவில்லை. அதற்குரிய செயன் முன்னேற்ற அறிக்கையும் 2010 யூன் வரை உரிய தரப்பினருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) பட்டப்பின் படிப்பு பாடநெறியொன்றைப் பின்பற்றுவதற்காக கலைப்பீடத்தின் 03 விரிவுரையாளர்களுக்காக பல்கலைக்கழக நிதியத்திலிருந்தும் செயற்திட்ட நிதியத்திலிருந்தும் ரூபா 12,383,503 செலுத்தப்பட்டிருந்தது. அவர்களுக்காக சம்பளமற்ற விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அக்காலப்பகுதிக்காக ரூபா 1,058,048 சம்பளம் மற்றும் படிகளும் செலுத்தப்பட்டிருந்ததுடன், அப்பட்டப்பின் பாடநெறியை பூர்த்தி செய்யாமல் மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு சமுகமளித்திருந்தனர். பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 2.4.2 ஆவது பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்திலிருந்து செலவிடப்பட்ட முழுத்தொகையையும் குறித்த தரப்பினரிடமிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் X ஆம் அத்தியாயத்தின் 21.133 மற்றும் 34 ஆம் பிரிவுகளுக்கு முரணாக தற்காலிக விரிவுரையாளர் ஒருவருக்கு பட்டப்பின் படிப்பு பாடநெறியொன்றைப் பின்பற்றுவதற்கு வெளிநாடு செல்வதற்காக பிணைப்பொறுப்பு பெற்றுக் கொள்ளாமல் பல்கலைக்கழக நிதியத்திலிருந்தும் செயற்திட்ட நிதியத்திலிருந்தும் 2003 முதல் 2006 வரை ரூபா 1,231, 905 செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2010, மே மாதம் வரையிலும் பல்கலைக்கழகத்திற்கு சமுகமளித்திருக்கவில்லை.

(க்) 1999, சனவரி 11 ஆந் திகதி பட்டப் பின் படிப்பு கற்கை நெறியொன்றைப் பின்பற்றுவதற்காக 03 ஆண்டுகளுக்கு கல்வி விடுமுறை அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்த விரிவுரையாளர் ஒருவர் பாடநெறி முடிவில் பல்கலைக்கழகத்திற்கு சமுகமளிக்காமையால் 1990, ஒற்றோபர் 10 ஆந் திகதிய 455 நவெம்பர் 20 ஆந் திகதிய 331.11.5.1 ஆம் இலக்க கட்டுப்பாட்டுச் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் உடன்படிக்கை மீறியவராகக் கருதி ரூபா 3,778,223 தொகையான பிணைப் பொறுப்பினை அறவீடு செய்ததன் பின்னர் சேவையை விட்டுச் சென்றதற்கான கடிதத்தை வழங்குமாறு தெரிவாக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் பிணைப் பொறுப்பில் விட்டுச் சென்றதற்கான கடிதத்தை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் பிணைப் பொறுப்பில் குறிப்பிடப்பட்டிருந்த தொகையை அறவீடு செய்யாமல் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார்.

(க) 2005, ஒற்றோபர் 20 மற்றும் 2006 பெப்புருவரி 25 ஆகிய தினங்களில் தகவல் தொழில்நுட்ப வலைப்பின்னல் மற்றும் தொலைத்தொடர்பு தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் பகுதித் தலைவருக்கு ஒதுக்கப்பட்டிருந்த சகல நேரடித் தொலைபேசி இணைப்புக்களை அகற்றி அதற்கான கொடுப்பனவை பல்கலைக்கழகத்திலிருந்து கொடுப்பனவு செய்வதனை நிறுத்தியிருந்த போதிலும், கலைப்பிரிவின் 03 திணைக்களத்திற்குரிய நேரடித் தொலைபேசிகளை பயன்படுத்தியமைக்காக ரூபா 152,283 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**2.2.7 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

விவசாய பீடத்தின் பேராசிரியர் ஒருவர் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் அங்கீகாரம் இல்லாமல் பல்கலைகழகத்திலிருந்து ரூபா 565,699 சம்பளம் மற்றும் படிகளாக பெற்றுக் கொண்ட காலப்பகுதியிலேயே விவசாய பட்டப் பின் படிப்பு நிறுவகத்தின் தாபனப் பணிப்பாளராக சேவை புரிந்து 2008, மே முதல் 2009 சனவரி வரை ரூபா ரூபா 600,000 படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### *3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு*

#### *3.1 நிதிசார் மீளாய்வு*

*3.1.1 நிதிசார் விளைவுகள்*

*சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2009 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக நிறுவனத்தின் செயற்பாடுகளிலிருந்து மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுக்க முன்னர், நிதிசார் விளைவுகள் ரூபா 1,923,451,984 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் ரூபா 2,360,229,410 தொகையான மீண்டெழும் செலவினத்திற்காக அரசாங்க மானியத்தை கணக்கீடு செய்ததன் பின்னர் பற்றாக்குறை ரூபா 153,766,285 வரை குறைவடைந்திருந்தது. அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 41,906,856,298 பற்றாக்குறையாக இருந்ததுடன், ரூபா 2,259,470,188 தொகையான மீண்டெழும் செலனவினத்திற்கான அரசாங்க மானியத்தை கணக்கிலெடுத்த பின்னர் பற்றாக்குறை ரூபா 176,387,148 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 22,620,863 ஆல் குறைவடைந்திருந்தது.*

#### *3.2 செயற்பாட்டு மீளாய்வு*

*3.2.1 செயலாற்றல்*

*பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன :-*

*(அ) பொருளாதார வசதியற்ற மாணவர்களுக்கு புலமை பரிசில்களை வழங்குவதற்காக வெளிநபர்களினால் பல்கலைக்கழகத்திற்கு நன்கொடைகள் வழங்கப்பட்டிருந்ததுடன், இந்நிதியை முதலீ்டு செய்து கிடைக்கப்பெறும் வட்டியில் 80% அளவிற்கான ரூபா 12,323,801 தொகையை குறித்த செயற்பாடுகளுக்காக செலவிடுவதற்காக நிர்வாகக் குழுவினால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் நோக்கத்திற்குரிய செயற்பாட்டிற்கு முறையான வேலைத்திட்டமொன்று இல்லாமையால் ஆண்டிற்காக புலமை பரிசில்களை வழங்குவதற்காக அவ்வட்டி வருமானத்தில் 74% ஆன ரூபா 9,155,120 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.*

*(ஆ) 2006, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழக நிதி ஒதுக்கீடுகளிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட முறையே ரூபா 74,500 மற்றும் ரூபா 920,980 மற்றும் ரூபா 1,258,878 பெறுமதியான 34 ஆய்வுகளை பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டிய காலம் முடிவடைந்திருந்த போதிலும், அதன் இறுதி அறிக்கைகள் 2010, யூலை வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.*

*(இ) மீளாய்வாண்டில் கல்விசார் நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட செலவினம் மற்றும் மாணவர் ஒருவருக்கான சராசரி செலவினம் முன்னால் இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.*

| *பீடம்* | *மாணவர்களின் எண்ணிக்கை* | | | *நேரடிக் கல்விச் செலவினம்* | | | *ஒரு மாணவருக்கான கிரயம்* | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | *2007* | *2008* | *2009* | *2007 ரூபா* | *2008 ரூபா* | *2009 ரூபா* | *2007 ரூபா* | *2008 ரூபா* | *2009 ரூபா* |
| கலை | 3,186 | 2,905 | 2,883 | 221,338,605 | 217,601,854 | 224,912,230 | 76,773 | 74,906 | 70,594 |
| பொறியியல் | 1,533 | 1,468 | 1,374 | 178,329,175 | 91,885,948 | 176,235,529 | 129,788 | 62,593 | 114,961 |
| விவசாயம் | 839 | 804 | 811 | 147,148,990 | 158,794,757 | 154,168,707 | 181,441 | 197,506 | 183,753 |
| வைத்தியம் | 995 | 977 | 955 | 167,376,423 | 166,009,222 | 172,313,385 | 175,263 | 169,917 | 173,179 |
| மிருக வைத்தியம் | 402 | 371 | 366 | 61,076,328 | 66,431,647 | 74,309,290 | 166,875 | 179,061 | 184,849 |
| விஞ்ஞானம் | 1,697 | 1,565 | 1,398 | 187,603,577 | 155,633,449 | 178,082,200 | 134,194 | 99,446 | 104,939 |
| பல் வைத்தியம் | 383 | 374 | 375 | 108,407,943 | 108,630,632 | 115,052,672 | 289,088 | 290,456 | 300,399 |
| ஒருக்கிணைந்த சுகாதாரக் கல்வி | 570 | 453 | 307 | 13,895,529 | 26,316,450 | 28,610,676 | 45,262 | 58,094 | 50,194 |

*3.2.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்:*

*02 முதல் 04 ஆண்டுகள் வரையான ரூபா 8,892,134 பெறுதமியான 36 வெளியக ஆய்வுகள் மற்றும் 05 ஆண்டு முதல் 07 ஆண்டுகள் வரையான 16 ஆய்வுக் கணக்கு ரூபா 611,734 பெறுமதியான 169 கணக்கு நிலுவைகள் அவ்வாறே காணப்பட்டன.*

***3.2.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்***

*பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன:-*

*(அ) 1997 செத்தெம்பர் 28 ஆந் திகதிய 352(1) ஆம் இலக்க அரசாங்க கேள்வி வழிகாட்டல் கோவையின் 68 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள நியதிகளுக்கு முரணாக ஆகக் குறைந்த விலையை கருத்திற் கொள்ளாமல் 2005 ஆம் ஆண்டில் பொறியியலாளர் ஆலோசனைகளைப்*

பெற்றுக் கொள்வதற்காக ரூபா 1,138,500 தனியார் நிறுவனமொன்றுக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டு வரை அதற்காக எவ்வித ஆலோசனை சேவைகளும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தினால் நீரைக் கொள்வனவு செய்வதற்காக அலகொன்றிற்காக ரூபா 16 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 07 வகையான விடுதிகளிலிருந்து அலகொன்றுக்கு ரூபா 9.50 வீதப்படி அறவிடப்பட்டமையால் நிறுவனத்திற்கு ரூபா 2,123,741 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

3.2.4 ஒப்பந்த நிர்வாகம்

பல்கலைகழகத்தின் கட்டிட திருத்தம் மற்றும் 25 நிர்மாணிப்புகளுக்குரிய உடன்படிக்கையின் பிரகாரம் 2000 முதல் 2005 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளில் அவ் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2009, திசெம்பர் 31 வரை அந்நிர்மாண வேலைகளுக்காக ரூபா 52,959,275 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும், வேலைகள் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. அச்செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2009 ஆம் ஆண்டிலும் முறையான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணங்களை நிறைவு செய்யாமலும் குறைபாடுகளுடனும் நிறைவேற்றப்பட்டிருந்த வேலைகள் தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 23 நிர்மாண வேலைகள் நடைமுறைவேலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2.5 முகாமைத்துவ செயற்திறனின்மை:

கீழே காண்பிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ செயற்திறனின்மைகள் அவதானிக்கப்பட்டன :-

(ஆ) 1982 மாச்சு 18 ஆந் திகதி மக்கள் வங்கியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி வருடாந்தம் குத்தகை வாடகை திருத்தியமைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமல் 1982 ஆம் ஆண்டு முதலிருந்தே வருடாந்தம் ரூபா 300 குத்தகை கூலியே அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) அழகியற்கலை பட்டப்பின் படிப்பு பாடநெறிக்குரிய விரிவுரைகளை நடாத்தாமல் நடாத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு ரூபா 20,500 தொகையும் ஒரே நேரத்தில் இரண்டு விரிவுரையாளர்களை நடத்தியதாக கையொப்பமிடப்பட்டு ரூபா 12,750 தொகையுமாக ரூபா 33,250 தொகை முறையற்ற நியமனக் கடிதம் இல்லாத விரிவுரையாளருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 87 ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழக மேன்முறையீட்டு சபையின் தீர்மானம் இறுதியானது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காததன் காரணமாக நியமனம் ஒன்று தொடர்பாக நியாயமின்மைக்கு உட்பட்டிருந்த பாதுகாப்பு ஊழியர் ஒருவரினால் பல்கலைக்கழகத்திற்கு எதிராக தொடரப்பட்டிருந்த 08 வழக்குகளுக்காக ரூபா 465,000 சட்டத்தரணிக் கட்டணமாகச் செலுத்த நேர்ந்திருந்தது.

(ஈ) ரூபா 2,235,000 தொகையான பல்கலைக்கழகத்தின் மூன்று குறுக்கு பாதைகளில் மின்சார வயர்களை இணைக்கும் வேலைகளுக்குரிய செயற்திட்டங்களை இனங்காணல், மதிப்பீடு தயாரித்தல், பொருட்களைக் கொள்வனவு செய்தல், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு சிபாரிசுகளை வழங்குதல் போன்ற சகல செயற்பாடுகளும் பல்கலைக்கழகத்தின் வேலை அத்தியட்சகரினால் (மின்சாரம்) நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியை விஞ்சி 02 சந்தர்ப்பங்களில் ரூபா 233,750 பெறுமதியான கொள்வனவுகள் இடம்பெற்றிருந்தன.

(உ) கலைப்படத்தின் இரண்டாவது பரீட்சை ஆண்டிற்கான கல்வி நடவடிக்கைகள் 2009, மே 23 ஆம் திகதி முடிவடைந்ததன் பின்னர் மாணவர்களுக்கு கல்வி விடுமுறை வழங்கப்பட்டிருந்த போதிலும், அத்திகதி முதல் ஓகத்து வரையான காலப்பகுதியில் 17 உதவி விரிவுரையாளர்களிடமிருந்து எவ்வித சேவைகளையும் பெற்றுக் கொள்ளாமல் ரூபா 1,074,637 சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் கலைப்பீடத்திற்குரிய 09 பிரிவுகளின் கல்விசார் பதவியணியினருக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை மிகைத்து 49 பேர் இணைக்கப்பட்டிருந்தனர்.

(உ) கலைப்பீடத்திற்குரிய 132 விரிவுரையாளர்களுக்குரிய கால அட்டவணையைப் பரீட்சித்த போது வாரமொன்றிற்கு 10 முதல் 20 மணித்தியாலங்கள் கற்பித்தல் நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டிருந்த 53 பேரும் 02 முதல் 09 மணித்தியாலங்கள் வரையான 82 விரிவுரையாளர்களும் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அப்பீடத்திற்குரிய 06 பிரிவுகளின் விரிவுரையாளர்களின் கால அட்டவணை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஊ) 1996, ஓகத்து 30 ஆந் திகதிய 27/96 ஆம் இலக்க பொது நிர்வாக அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் சேவை நீடிப்பிற்கான விண்ணப்பத்தை நிராகரிப்பதாயின் அத்தீர்மானத்தை உரிய அமைச்சரிடம் விசாரித்து அமுல்படுத்தப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையால் கட்டாய ஓய்வுப் பெறச் செய்யப்பட்ட உத்தியோகத்தரால் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் ரூபா 198,000 ஆன நட்டஈடு வழங்க நேரிட்டது.

(எ) ஒருங்கிணைந்த சுகாதாரக் கல்வி பீடத்திற்குரிய நிர்மாண வேலைகளுக்குரிய தொழிலாளர் உழைப்பு நேர் ஒப்பந்த அடிப்படையில் நிறைவேற்றும் பொருட்டு ரூபா 961,812 தொகைக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ருந்த போதிலும், அதற்குரிய செய்யப்பட்ட வேலைகள் தொடர்பான அளவீட்டு அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்துடன் எழுத்துமூல உடன்படிக்கையை மேற்கொள்ளாமல் பட்டமளிப்பு விழா மண்டபத்தை நிர்மாணிக்கும் பொருட்டு ஆலோசனைக் கட்டணத்திற்காக 2009, பெப்புருவரி 22 ஆந் திகதி ரூபா 500,000 முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன், 2010, மே 10 ஆந் திகதி வரையில் 01 முல் 03 மாதங்கள் கடந்திருந்த போதிலும், அதற்குரிய நிர்மாண வேலைகளை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2.6 *பயன்பாடற்ற மற்றும் குறைபாவனைச் சொத்துக்கள்*

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன :-

(அ) ரூபா 7,252,065 பெறுமதியான 39 ஏனைய நிதியக் கணக்கு மீதிகள் ஆண்டு 02 முதல் 04 வரையிலும் ரூபா 6,393,151 பெறுமதியான 66 கணக்கு மீதிகள் 05 வருடங்களுக்கு மேலாகவும் அசைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) தொடங்கொல்ல விவசாய ஆராய்ச்சி நிலையம் மற்றும் பண்ணையை நடாத்திச் செல்லலின் அடிப்படை நோக்கம் மாணவர்களின் ஆராய்ச்சி அறிவினை அதிகரிப்பதற்காக இருந்த போதிலும், அந்நிறுவனத்தின் ஆய்வு நடவடிக்கைகளுக்கு மாணவர்களை பங்கு பெறச் செய்தமைக்கு போதிளயவில் சான்றுகள் இல்லாதிருந்ததுடன், அங்கு காணப்படும் பௌதீக நிலைமையின் பிரகாரம் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான சூழல் ஒன்று தயார்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 2004 முதல் 2009 வரை ரூபா 15 மில்லியன் முதல் 18 வரையான வருடாந்த மீண்டுவரும் செலவினத்தை மேற்கொண்டு பராமரித்துச் செல்லும் நிலையத்திற்குச் சொந்தமான ஆராய்ச்சிக் கூடம் மற்றும் விடுதி உட்பட 05 கட்டிடங்கள் நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் காணப்பட்டது.

(இ) ஒன்றிணைந்த சுகாதார கல்வி பீடத்திற்காக ரூபா 6,567,694 செலவு செய்யப்பட்டு 2006 ஆம் ஆண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த கட்டிடமொன்றை அத்தினத்திலிருந்து கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2009, நவெம்பர் 06 ஆந் திகதி வரையில் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் இருந்தது.

3.2.7 *கூட்டிணைந்த திட்டம் :*

2008 திசெம்பர் 13 ஆந் திகதி கட்டுப்பாட்டுச் சபை அங்கீகரித்த கூட்டிணைந்த திட்டத்தின் நோக்கத்திற்குட்பட்ட இலக்குகளுக்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையால் கூட்டுத் திட்டத்தின் நோக்கம் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீட்டினூடாக நிறைவேற்றப்பட்டதா என்பதனை மீளாய்வு செய்வதற்கு முடியவில்லை.

3.2.8 *பாதீட்டுக் கட்டுப்பாடு :*

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன:

(அ) மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்தை உண்மையான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடும் போது 22 வருமான விடயங்களில் 4% முதல் 71% வரையில் விலகலும் 49 செலவின் விடயங்களில் 17% முதல் 100% வரையான விலகலும் அவதானிக்கப்பட்டதால் பாதீட்டினை சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 08 வெளிவாரி ஆய்வுகளுக்காக கிடைக்கப் பெற்ற நிதி ஏற்பாட்டை மிகைத்து ரூபா 2,677,128 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அத்தொகை 2009, திசெம்பர் 31 வரையிலும் தீர்வு செய்யப்படாமல் இருந்தது.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்:**

கணக்காய்வின் போது அவதானிப்பட்ட முறைமைகளும் கட்டுப்பாடுகளும் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான சேகரிப்பு
(இ) கொள்வனவு
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) முற்பணங்கள்
(ஊ) நிலையான சொத்துக்கள்
(எ) இருப்பு மற்றும் பொருட் கட்டுப்பாடு

(ஏ) வாகனக் கட்டுப்பாடு
(ஐ) பதிவேடுகள் பேணுகை
(ஒ) ஆய்வுகளை நடாத்தல்
(ஓ) நடைபெறும் வேலைகள்

எஸ். ஸ்வர்ணஜோதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

7-526

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள

## பிரதேச அபிவிருத்தி வங்கி - ஊருபொக்க கிளை

(முன்னர் றுஹுஹுணு அபிவிருத்தி வங்கி என அறிமுகம் செய்யப்பட்ட)

2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 40 ஆம் அதிகாரத் தின் கீழும் 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினதால் வழங்கப்பட்ட பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையி னால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்.

2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கியின் சட்டத்தின்கீழும் ஸ்ரீலங்கா மத்திய வங்கியின் நிதிச் சபையினால் பிரசுரிக்கப்பட்ட 1998.04.24 ஆந் திகதிய அதிவிசேட அரச வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலுக்கிணங்க உருவாக்கப்பட்ட றுஹுஹுணு அபிவிருத்தி வங்கிக்கு சாட்டப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், 2009.10.28 ஆந் திகதி நடாத்தப்பட்ட பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை கூட்டத்திலே கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது:-

"றுஹுஹுணு அபிவிருத்தி வங்கியின் பெயரில் சட்டத்தரணியும் பிரசித்திபெற்ற நொத்தாரிசுமான திரு. அஜித் பி. அபேசேகர நந்தன அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008.11.27 ஆந் திகதிக்குரிய இலக்கம் 4491 என்ற ஈட்டுப்பத்திரத்தின் கீழ் அறவிட வேண்டிய பணம் செலுத்தல் தம்பஹல எஸ். எஸ். டிரேடஸ் எனும் முகவரியில் வசிக்கும் அரம்பகே தக்சிலா தமயன்தியும் விதானகமகே கருணாதிலக என்போர்களினால் செலுத்தாது விடப்பட்டதினாலும் அவ் ஈட்டுப்பத்திரத்தின் கீழ் பன்னிரண்டு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பது ரூபா (ரூபா 12,52,750) பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு செலுத்த வேண்டியிருப்பதினாலும் 2009.07.15 ஆந் திகதியிலிருந்து வருடத்திற்கு 27.5% பன்னிரண்டு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பது ரூபா (ரூபா 12,52,750) பணத்துக்காக ஏலவிற்பனை திகதி வரை இன்னும் வட்டியுடன், ஏலவிற்பனைச் செலவும் இன்னும் ஏதாவது பணம் கிடைக்க இருப்பின் அவற்றையும் அறவிட்டுக் கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரான திரு. ஜீ. பீ. ஆனந்த அவர்களினால் அவ் இலக்கம் 4491 என்ற ஈட்டுபத் திரத்தின் கீழ் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களும் ஏனைய வற்றுடன் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கியின் பணிப்பாளர் சபை இதில் தீர்மானித்துள்ளது."

### ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்ட மொரவக்க கோரலேயில் தம்பஹலவில் அமைந்துள்ள ருக்அத்தனகஹவத்தயை பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 05 என்ற துண்டின் இல. 01 என்ற துண்டு. வடக்கே : கொடபொலவிலிருந்து மாவரலைக்கு செல்லும் வீதியும் ; கிழக்கே : இக்காணியின் இல. 02 என்ற துண்டும் இல. 04 என்ற துண்டும் ; தெற்கே : மஹகெதரவத்தயும், பரணவத்தையும் பிங்கிலியத்தயும்; மேற்கே : கிராம சபை புறம்பாக்கப்பட்ட லொட் பீ வீதியை எல்லையாகக் கொண்ட இருபத்தெட்டு தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 28.5பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் நிலம் உட்பட பழவர்க்கங்கள், கட்டிடங்கள் ஆகிய அனைத்துமாகும்.

இச் சொத்துக்கள் 75/257ஏ 09/165 நில. 52/08 இல் காணிக் காணிப் பதிவு அலுவலகத்திலே 2008.11.27 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள் ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

முகாமையாளர்.

பிரதேச அபிவிருத்தி வங்கி,
தென் மாகாண அலுவலகம்,
பம்புரண,
மாத்தறை.

7-451

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இல.: 0024 1000 3727 - ஏ. பி. கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்

2011, யூலை 06 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜீ. என். எம். கோதாகொட என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, ஒற்றோபர் 19 ஆந் திகதியிடப்பட்ட இல. 491 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டவர் என்ற வகையில்

கடமைப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கம்பனிச் சட்டங்களுக்கு அமைவாக நேர்த்தியாக கூட்டிணைக்கப்பட்டு இல. PV 3954 பதிவு இலக்கத்தைக் கொண்டுள்ள, பெயர் மற்றும் வடிவில் "ஏ. பி. கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் மகுடத்தின் கீழ் இயங்கும் கம்பனி மற்றும் அங்கம்பொடிகே வர்ணகுமார என்பவர்கள் பெற்றுக்கொண்ட கடனை மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால் ,

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு சீ. ஜீ. அபேவிக்ரம என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, மே 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 212 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக் கொண்ட கடனை, கடன்பட்டவர் என்ற வகையில் கடமைப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கம்பனி சட்டங்களுக்கு அமைவாக நேர்த்தியாக கூட்டிணைக்கப்பட்டு இல. PV 3954 பதிவு இலக்கத்தைக் கொண்டுள்ள, பெயர் மற்றும் வடிவில் "ஏ. பி. கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் மகுடத்தின் கீழ் இயங்கும் கம்பனி மற்றும் கமகே அஷோகா தமயந்தி என்பவர்கள் பெற்றுக்கொண்ட கடனை மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால் ,

கூறப்பட்ட இலக்கங்கள் 491 மறறும் 212 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் எண்பத்து நான்கு இலட்சத்து இருபத்தேழாயிரத்து நாற்பத்தெட்டு ரூபா நான்கு சதம் (ரூ. 84,27,048.04) 2010, ஓகத்து 16 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட எண்பத்து நான்கு இலட்சத்து இருபத்தேழாயிரத்து நாற்பத்தெட்டு ரூபா நான்கு சதம் (ரூ. 84,27,048.04) 2010, ஓகத்து 17 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 491 மற்றும் 212 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை, எழுபத்தைந்து இலட்சத்து ஐம்பதாயிரத்து நூற்று எழுபத்துமூன்று ரூபா இருபத்தாறு சதம் (ரூ. 75,50,173.26) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபது வீதம் (20%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 491 மற்றும் 212 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

**முதலாவது அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின் நீர்கொழும்பு பதிவுப் பிராந்தியம் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள் ஹுனுபிட்டிய இரண்டாம் பிராந்தியத்தில் அமைந்த "கொஸ்கஹாவத்த, கோஹோங்ஹாவத்த மற்றும் தல்கஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. பீ. விமலசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, சனவரி 15 ஆந் திகதியிடப்பட்ட இல. 4858 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன.- வடக்கிற்கு : ஜயந்தி கல்தேரா என்பவரினால் காணி; கிழக்கு மற்றும் தெற்கிற்கு : புகையிரதப் பாதை மற்றும் புகையிரதப் பாதை ஒதுக்கம் மற்றும் ; மேற்கிற்கு : கமல் பெர்னாண்டோ என்பவரினால் காணி, 12 அடிகள் அகல வீதி மற்றும் எம். குமார என்பவரின் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் பத்தொன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 19பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 4858 எனும் வரைபடத்திற்கு அமைவாக நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் A 297/163 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின் நீர்கொழும்பு பதிவுப் பிராந்தியம் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள் ஹுனுபிட்டிய இரண்டாம் பிராந்தியத்தில் அமைந்த "அம்பகஹவத்த' என்றழைக்கப் படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். ஐ. பெர்ணாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997, ஓகத்து 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 4672 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன வடக்கிற்கு : நீரோடை ; கிழக்கிற்கு: ஜயந்தி கல்தேரா அவர்களின் காணி; தெற்கிற்கு: கே. எம். சீ. பெர்ணாண்டோ என்பவரின் காணி மற்றும் ; மேற்கிற்கு : வீதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் பதின்நான்கு தசம் ஒன்று சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 14.10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிர வேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர் புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 4672 எனும் வரைபடத்திற்கு அமைவாக நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் A 298/52 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

டபிள்யூ. ஆர். எஸ். பெர்ணான்டோ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1959, ஒற்றோபர் 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 1884 வரைபடத்தின் மீது பிரவேசிக்கும் மற்றும் மார்க்க உரிமைகளுடனானது.

ஈட்டு முறி இல. 491 இன் மீது பிணையாக ஈடுவைக்கப்பட்டுள்ளது.

**இரண்டாவது அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின் நீர்கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் குரன இரண்டாம் பிராந்தியத்தில் அமைந்த கொழும்பு வீதி வரிமதிப்பீட்டு இல. 642/1 ஐ ஏற்ற தங்காஹாகும்புர

"தங்காஹாகும்புர, மற்றும் வீதியேபொடவத்த தலகாஹாவத்த" (வீதியே பொடவத்த மற்றும் பதிவு உறுதியின் பிரகாரம் மாதங்காஹா கும்புர) என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. பீ. விமலசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, பெப்புருவரி 01 ஆந் திகதியிடப்பட்ட இல. 4882 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன வடக்கிற்கு : லொட் 2 மற்றும் கொழும்பு வீதி, வரிமதிப்பீட்டு இல. 642 எனும் எம். குமார என்பவரின் காணி; கிழக்கிற்கு: கொழும்பு வீதி, வரிமதிப்பீட்டு இல. 646 எனும் எம். எம் ரத்னவத்தி (உறுதியின் பரிகாரம் எம். எம். ரத்னாவலி) என்பவரின் காணி. கொழும்பு வீதி, வரிமதிப்பீட்டு இல. 648 எனும் சந்ரா பெர்னாண்டோ என்பவரின் காணி மற்றும் கொழும்பு வீதி,

வரிமதிப்பீட்டு இல. 650 எனும் எம். ஜே. டபிள்யூ. எல். பெர்ணாண்டோ என்பவரின் காணி; தெற்கிற்கு : கொழும்பு வீதி, வரிமதிப்பீட்டு இல. 650 எனும் எம். ஜே. டபிள்யூ. எல். பெர்ணாண்டோ என்பவரின் காணி மற்றும் ; மேற்கிற்கு : கொழும்பு வீதி, வரிமதிப்பீட்டு இல. 640/3 A எனும் பிரிமால் குணசேக்கர என்பவரின் காணி மற்றும் கொழும்பு வீதி, வரிமதிப்பீட்டு இல. 640/3 எனும் எச். டீ. மங்கலிகா என்பவரின் காணி (உறுதியின் பிரகாரம் கொழும்பு வீதி, வரிமதிப்பீட்டு இல. 640/3A பிரிமால் குணசேக்கர என்பவரின் காணி) ஆகிய இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்தொன்பது தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 19.25பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 4882 எனும் வரைபடத்திற்கு அமைவாக நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் A 283/158 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இல. 4882 எனும் உறுதியில் காட்டப்பட்ட லொட் 2 (10 அடிகள் அகல வீதி)

பிணையுறுதி இல. 212 இதன்படி கீழ் பிணையாக ஈடுவைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-571

---

**சம்பத் வங்கி பீ.எல்.சீ.**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

எம். ஏ. டபிள்யூ. குணதிலக்க மற்றும் ஜீ. ரீ. டி. சில்வா ஜயசிங்க
கணக்கு இல. : 1001 0001 5824 மற்றும் 1009 5003 9730

சம்பத் வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் 2004.02.26 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட ஒரு கூட்டத்தில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"கடப்பாட்டாளராக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் களனி, கிரிபத்கொடை, பிரஜாமண்டல மாவத்தையில் 187/பீ1 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த முத்துக்குட்டி ஆராச்சிலாகே வத்சலா குணதிலக்க என்பவர், சம்பத் வங்கி லிமிட்டெட் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசுகளான எஸ். வீ. ஈ. விஜேரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000, பெப்புருவரி 22 ஆந் திகதிய 2245 ஆம் மற்றும் 2000, செத்தெம்பர் 15 ஆந் திகதிய 2303 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவைச் செலுத்துவதற்குத் தவணை தவறியுள்ளாராதலாலும், 2003, நவெம்பர் 14 ஆந் திகதியன்றுள்ளவாறு பத்து இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து முந்நூற்று எட்டு ரூபா முப்பத்தாறு சதம் (ரூ. 10,51,308.36) கொண்ட இலங்கையின் சட்டமுறையான பணமாகவுள்ள பணத்தொகையொன்று சம்பத் வங்கி லிமிட்டெட்டுக்கு இப்போது வருமதியாகவும் செலுத்தப்பட வேண்டியதாகவும் உள்ளதாதலும், அத்துடன் கடப்பாட்டாளராகச் சொல்லப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் களனி, கிரிபத்கொடை, பிரஜாமண்டல மாவத்தையில் உள்ள 187/பீ1 ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவரான ஞானசிறி திலக் டி சில்வா ஜயசிங்க என்பவரும், ஈடுவைப்பவராகச் சொல்லப்பட்ட முத்துக்குட்டி ஆராச்சிலாகே வத்சலா குணதிலக்க என்பவரும், சம்பத் வங்கி லிமிட்டெட் சார்பில் கொழும்பைச் சேரந்த பிரசித்த நொத்தாரிசுவான டீ. பீ. எல். எச். எச். சில்வா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000, திசெம்பர் 06 ஆந் திகதிய 2046 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது வருமதியான கொடுப்பனவைச் செலுத்துவதற்குத் தவணை தவறியுள்ளாராதலாலும், 2003, நவெம்பர் 14 ஆந் திகதியன்றுள்ளவாறு பதினொரு இலட்சத்து எழுபத்துமூவாயிரத்து தொளாயிரத்து பதினெட்டு ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ. 11,73,918.92) கொண்ட இலங்கையின் சட்டமுறையான பணமாகவுள்ள பணத்தொகையொன்று சம்பத் வங்கி லிமிட்டெட்டுக்கு இப்போது வருமதியாகவும் செலுத்தப்பட வேண்டியதாகவும் உள்ளதாதலும், அத்துடன் 2003, நவெம்பர் 14 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட 2245 ஆம், 2303 ஆம், 2046 ஆம் ஈட்டு முறிகளின் கீழ் சொல்லப்பட்ட முறிகளின் மீது நிலுவையாகவுள்ள மொத்தத் தொகையாக இருபத்திரண்டு இலட்சத்து இருபத்தையாயிரத்து இருநூற்று இருபத்தேழு ரூபா இருபத்தெட்டு சதம் (ரூ. 22,25,227.28) கொண்ட மொத்தப் பணத்தொகையொன்று சம்பத் வங்கி லிமிட்டெட்டுக்கு இப்போது வருமதியாகவும் செலுத்தப்பட வேண்டியதாகவும் உள்ளதாதலாலும், சம்பத் வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபை, 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 2245 ஆம், 2303 ஆம், 2046 ஆம் இலக்கங்களைக் கொண்ட சொல்லப்பட்ட முறிகளினால் சம்பத் வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்டவையும் இதற்கான அட்டவணையில் மிக முழுமையாக விவரிக்கப்பட்டவையுமான ஆதனமும் வளவுகளும், சொல்லப்பட்ட இருபத்திரண்டு இலட்சத்து இருபத்தையாயிரத்து இருநூற்று இருபத்தேழு ரூபா இருபத்தெட்டு சதம் (ரூ. 22,25,227.28) கொண்ட பணத்தொகையை, 2003, நவெம்பர் 15 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்குப் பதினேழு தசம் ஐந்து சத வீதத்தில் (17.5%) எட்டு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து முந்நூற்று எண்பத்து நான்கு ரூபா (ரூ. 8,69,384) கொண்ட பணத்தொகையொன்றின் மீது மேலதிக வட்டியுடனும், ஏழு இலட்சத்து தொண்ணூற்றையாயிரத்து ஐநூற்று நாற்பத்து மூன்று ரூபா (ரூ. 7,95,543) கொண்ட மேலதிகப் பணத்தொகை மீதுஆண்டொன்றுக்குப் பதினெட்டு சதவீத (18%) மேலதிக வட்டியுடனும், இதுவரை பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனும் இருப்பின்) அவற்றைக் கழித்து, உறப்பட்ட விளம்பரச் செலவுகள், ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பைச் சேர்ந்த உரிமம் பெற்ற ஏலவிற்பனையாளரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரினால் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்கப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்புப் பதிவுப் பிரிவினுள் கம்பஹா மாவட்டத்தில் சியனே கோரளே, அதிகாரி பற்றுவில் தளுகமவின்

*களனி உப அலுவலகத்தின் பிரதேச சபை எல்லைகளினுள் தலவத்துஹேன்பிட்ட வடக்குக் கிராமத்தில் அமைந்துள்ள 7 ஆம் குறுக்கு வீதியிலுள்ள 40 1/1 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட வளவ்வேவத்த மறுபெயர் லான்ஸ்டேல் தோட்டம் எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளரான டீ. சீ எம். சீ. விமலரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1999, நவெம்பர் 14 ஆந் திகதிய 317/ 1999 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டதும், காணித்துண்டம் ஏ என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அத்துடன் சொல்லப்பட்ட காணித்துண்டம் ஏ பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது - வடக்கில் : பூ வரைபடம் கம். 577 இலுள்ள காணித்துண்டம் 2 இன் மீதிப்பாகம் ; கிழக்கில் : கிரிபத்கொட ஆசுப்பத்திரி வளவுகள் ; தெற்கில்: பூ வரைபடம் கம். 577 இலுள்ள காணித்துண்டம் 2 இன் மீதிப்பாகம் ; மேற்கில் : வீதி : பரப்பளவில் இது. சொல்லப்பட்ட 317/1999 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒன்பது தசம் ஒன்று பூச்சியம் பேர்ச்சுகளை (0ஏ. 0றூ. 9.10பே.) கொண்டுள்ளது. கொழும்பு மாவட்டக் காணிப் பதிவகத்தில் தொகுதி 1 பக்கம் சீ 600/ 209 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*பூ. வரைபடம் கம். 577 இல் குறிப்பிடப்பட்ட வீதி வழிகளைப் பயன்படுத்துவதற்கான உரிமையுடன் சேர்த்து.*

*பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,*

*கம்பனிச் செயலாளர்.*

*7-572*

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

*394 (3) ஆம் பிரிவின் கீழான "சிலோன் மர்சன்ட்ஸ் லிமிட்டெட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்*

*1938 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1941.01.29 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "சிலோன் மர்சன்ட்ஸ் லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.*

*அவ்வாறு கலைக்கப்படாமல் இருப்பதற்கு தகுந்த காரணம் காட்டப் படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "சிலோன் மர்சன்ட்ஸ் லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.*

*டி. கே. ஹெட்டியாராச்சி,*
*கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.*

*பீவீஎஸ் 31*
*கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,*
*இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,*
*கொழும்பு 10,*
*2012, யூன் 27.*

*7- 446*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.